மாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு இதை ஒரு சவாலாக விடுகிறேன். இந்தச் சவாலை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா? இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் தெரிவிக்கட்டும்; இருவரும் இராஜிநாமா செய்துவிட்டு தேர்தலிலே நிற்போம்.

அடுத்தபடியாக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது இந்த ஆட்சி மக்களுக்காக என்ன செய்திருக்கிறது என்று கேட்டார்கள்.

(4) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவையில் சவால் விடுவதாகச் சொல்வது சரிதானா என்பது குறித்து.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். சட்டசபையில் சவால் விடுகிறேன் என்று சொல்வது சரியா? சரியில்லை என்று நான் கருதுகிறேன். சவால் விடுவது சரியல்ல என்று நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, சவால் விடும் பழக்கத்தை நிறுத்த வேண்டும். கனம் உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தைகளை வாபஸ் பெறவேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம்: ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இன்றைக்கு சவால் விடுகிறேன் என்று சொன்னவுடனே, வாபஸ் பெற வேண்டும் என்கிறீர்களே. நேற்றைக்கு ஹாண்டே சவால் விட்டாரே. அப்போது நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே. இப்போது மட்டும் ஏன் வாபஸ் பெறவேண்டுமென்று சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சவால்விட்டுப் பேசக்கூடாது என்று நேற்று சொன்னேன். உறுப்பினர்கள் சவால் விடாமல் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: நான் அறைகூவல் விடுகிறேன் என்று திருத்திக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், நேற்றுதான் சட்டசபையில் சவால் விடக்கூடாது என்று சொன்னீர்கள். அப்படி ஒரு ரூலிங் கொடுத்த பிறகும் கனம் உறுப்பினர் 'சவால் விடுகிறேன்' என்று

இப்போது சொன்னார். அப்படி சொன்னது சரியா? சரி என்றால் தங்கள் தீர்ப்பை மீறியதல்லவா? எல்லோரும், சவால் விடுகிறேன் என்று பேசக்கூடாது என்ற தங்களுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டுமென்றால் இப்போது அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'சவால் விட்டுப் பேசுகிறேன்' என்று சொல்வது கூடாது என்று சபாநாயகர் அவர்கள் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதற்காக அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவில்லை. அதுதான் இன்றைக்கு எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் (தொடர்ச்சி).

திரு. எஸ். ஆறுமுகம்: திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவும் அதனுடைய ஆதரவாளர்களுக்காகவும்தான் இன்றைக்கு இந்த ஆட்சி வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று இந்த ஆட்சியை அமைத்திருக்கிறது. அந்தப் பெருவாரியான மக்களுக்காக, அந்தப் பாட்டாளி மக்களுக்காக, அந்தத் தொழிலாளி மக்களுக்காக, அந்த உழைப்பாளி மக்களுக்காக இந்த ஆட்சி பயன்படாமல் வேறு யாருக்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்றுதான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல் தோல்வியை வைத்துக்கொண்டு, தி.மு.கழக ஆட்சி இராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல் தமிழகத்தின் ஒரு பகுதிதான். திண்டுக்கல்லே தமிழகம் அல்ல. ஆகவே, திண்டுக்கல் தீர்ப்பு தமிழகம் முழுவதற்குமான தீர்ப்பல்ல. முன்சீப் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு வந்தால், அதற்குப் பின்னால் மாவட்ட நீதிமன்றம்,